**தெஹியோவிட்ட பிரதேச சபை**

**கேகாலை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 08 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெஹியோவிட்ட பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திரண்ட நிதியத்தின் மீதியான ரூபா 10,308,230 தொகை அதற்குரிய பிரதான பேரேட்டில் ஆரம்ப மீதியான ரூபா 7,144,255 உடன் ஒப்பீடு செய்தபோது ரூபா 3,163,975 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆண்டின் போது 04 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,555,017 தொகையான களஞ்சியப்பொருட்கள், உரிய

நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வழங்கல் மற்றும் உபகரணக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையினால் ஆண்டின்போது வழங்கல்கள் மற்றும் உபகரணச் செலவினங்கள் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் திரண்ட நிதியக் கணக்கிலும் அதே அளவால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது முன்னைய 04 வருடங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 236,053 கூட்டுத்தொகையான கணக்காய்வுக் கட்டணங்கள் திரண்ட நிதியத்தில் வரவு வைப்பதற்குப் பதிலாக 2014 ஆம் ஆண்டின் செலவினமொன்றாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டமையினால் ஆண்டின் மிகை அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேலதிகமான கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 98,542 கூட்டுமொத்தமாக அவதானிக்கப்பட்டது.

(உ) 2014 ஆம் ஆண்டிற்கான முத்திரைக் கட்டண பட்டோலையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 11,704,641 தொகை கிடைக்க வேண்டியிருந்த போதிலும், கணக்குகளில் அது ரூபா 11,634,541 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 70,100 தொகை ஆண்டின் வருமானமும் நடைமுறைச் சொத்துக்களும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2013 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 6,000,000 கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 3,725,603 தொகையும் 2015 ஏப்ரல் 08 ஆந் திகதி ரூபா 7,306,713 தொகையும் கிடைத்தமையால் 2013 ஆம் ஆண்டிற்கான குறை ஒதுக்கீடு ரூபா 5,032,316 தொகை அவதானிக்கப்பட்டது. எனினும் 2014 ஆம் ஆண்டில் நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் முத்திரைக் கட்டண மிகை ஒதுக்கீடுகளாக ரூபா 2,274,397 தொகை சீராக்கப்பட்டமையினால் ரூபா 7,306,713 இனால் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணமும் திரண்ட நிதியமும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) ஆண்டின் போது மாகாண சபை நிதியம் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட ஏனைய அமைச்சு நிதியுதவியின் அடிப்படையில் சபை அதிகாரப் பிரதேசத்தில் நிறைவேற்றப்பட்ட 251 நிர்மாணங்களுக்காக மூலதன மானியமாகக் கிடைத்த

ரூபா 82,636,161 மற்றும் அதில் மூலதனச் செலவினமாக ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 64,463,465 தொகைகள் பொது வைப்புக் கணக்கின் ஊடாக பெறுவனவுகள் கொடுப்பனவுகள் பதியப்பட்டமையின் காரணமாக, அவை இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) உள்ளூராட்சி சேவை ஓய்வூதியத்திற்காக 2014 திசெம்பர் பட்டியல்களின் பிரகாரம் செலுத்தவேண்டிய நிலுவைமீதி ரூபா 1,698,773 ஆக இருந்த போதிலும், அது கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 21,357,391 ஆக இருந்ததுடன், அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 21,144,174 ஆனமையால் ரூபா 213,217 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

(அ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்காக 2010/11 ஆம் ஆண்டுகளின் போது சேகரிக்கப்பட்ட பெறுமதிசேர்வரி வைப்புக்கள், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரி என்பவற்றின் கூட்டு மொத்தமாக ரூபா 3,015,033 தொகை 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாது செலுத்த வேண்டிய கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1989 மற்றும் 1992 முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை கழிவுப்பொருள் வரி, கடை வாடகை மற்றும் தண்டப்பணம், இறைச்சிக்கடை, மீன்கடைகளின் தண்டப்பணம் என்பவற்றில் கூட்டுமொத்தமாக ரூபா 103,408 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பெறவேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத:தவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 52,839 கூட்டுமொத்தமான 02 செயல்நிமித்த உப கட்டுநிதிகள் 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 190,840 கூட்டுத்தொகையான 14 காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,591,446 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,699,514 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 1,891,932 அதிகரிப்பைக் காண்பித்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

---------------------------------

### 2.2.1 வருமாக சேகரித்தலின் செயலாற்றல்

-------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2014.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2014.01.01 இல் காணப்பட்டமீதி | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் நிலுவை | |
| | | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 |
| i. | ஆதனவரியும் வரியும் | 3,901 | 750 | 4,046 | 1,528 | 3,151 | 2,518 | 5,669 |
| ii. | வாடகை | 83 | 6 | 3,250 | 3,250 | 77 | - | 77 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 135 | 20 | 667 | 667 | 115 | - | 115 |
| iv | ஏனைய வருமானம் | 10,753 | 6,761 | 32,488 | 16,759 | 3,992 | 15,728 | 19,721 |

### 2.2.2 தொலைத்தொடர்பு கோபுரக் கட்டணம்

-----------------------------------------------------------

தொலைத்தொடர்பு கோபுரங்கள் ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து தொலைத்தொடர்புகளால் பெறப்படுகின்ற சேவைகளுக்காக வருடாந்தம் வியாபார வரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காகவும் அதற்கு முன்னைய ஆண்டிற்காகவும் ரூபா 42,000 கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வியாபார அனுமதிப் பத்திரக்கட்டணம்

--------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் கீழ் மீதி ரூபா 114,908 தொகையிலிருந்து ரூபா 101,511 தொகை 05 வருடங்களை விட மேற்பட்ட பழைய நிலுவைப் பணமாகும்.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 4,000,000 ஆக இருந்ததுடன் கிடைக்க வேண்டிய முத்திகைக் கட்டண வருமானம் ரூபா 11,704,541 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை ஊழியர்கள் மூவரிடமிருந்து பெறவேண்டியிருந்த ரூபா 75,526 தொகையான ஊழியர் கடன் மீதியொன்று நீண்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட போதிலும் நிலுவைக் கடன் பணத்தை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் சேவை நீக்கத்திற்குள்ளாகிய தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 46,525 கடன் மீதியும் இருந்தது.

(ஆ) பெறவேண்டிய சம்பள மீளளிப்பு வருமானத்தில் காண்பிக்கப்பட்ட முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரிடமிருந்து 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் கடனுக்காக அறவிடவேண்டிய நிலுவைப் பணம் ரூபா 70,000 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 1,655,818 கூட்டுமொத்தமான பணம் பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெகோ இயந்திரத்தின் பாவனை தொடர்பாக பேணப்பட்டு வந்த வங்கிக் கணக்கின் பிரகாரம் அவ்வாண்டின் வருமானம் ரூபா 874,930 ஆக இருந்த போதிலும், செலவினம் ரூபா 651,152 ஆக இருந்தது. அதற்கு மேலதிகமாக பெகோ இயந்திரத்திற்காக பயன்படுத்தப்பட்ட எரிபொருளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,212,756 தொகையும் பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 970,732 தொகையும் சபையின் பொதுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்தச் செலவினங்களைக் கவனத்திற் கொள்ளும் போது பெகோ இயந்திரத்தை செயற்படுத்தியமையினால் ரூபா 1,959,855 தொகையான தொழிற்பாட்டு நட்டமொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

தெஹியோவிட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கும் நிர்மாண வேலைவிடய இலக்கம் 01 இன் பிரகாரம் ஆற்றப்படாத வேலைக்காக ரூபா 24,274 தொகையொன்று மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அளவிடை அறிக்கையில் வேலை விடய இலக்கம் 02 இன் பிரகாரம் கருங்கல்லினால் சுவரைக் கட்டுவதற்காக 59.56 கியூப் இற்காக ரூபா 1,586,260 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் வேலையின் பௌதீக பரிசோதனையின் போது துண்டுக் கற்கள் 48.9 கியூப் இனால் சுவர் கட்டப்பட்டிருந்ததுடன் நிறைவேற்றப்படாத 11.47 கியூப் இற்காக ரூபா 305,570 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

68 செலவின விடயங்களில் ரூபா 16,114,500 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் செலவின விடயமொன்றில் நிதிஏற்பாடு ரூபா 13,000 இனால் விஞ்சி செலவிடப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிர்வாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்